முழுப் பதிப்புரிமையுடையது

# இலங்கை கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் கழகம்

## மட்டம் III பரீட்சை – 2022 யூலை

## (302) முகாமைத்துவக் கணக்கீடும் நிதியியலும்

(Management Accounting and Finance)

2022-08-21
காலை
[8.45 – 12.00]

பக்கங்கள் : 08
வினாக்கள் : 10

- **அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
*விடையெழுத : 03 மணித்தியாலம்*

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடை தருக.***

(3) ***விடைகள்*** *உமக்கு வழங்கப்படும்* ***விடைப்புத்தகத்தில்*** *நீர் பரீட்சை எழுத விண்ணப்பித்த* ***அதே மொழியில்*** *எழுதப்பட வேண்டும்.*

(4) *சகல செய்முறைகளையும் கணிப்பீடுகளையும் காட்டுக. நீர் எடுகோள்கள் எதனையும் மேற்கொண்டிருந்தால் அவற்றை தெளிவாக குறிப்பிடுக.*

(5) *திட்டமிடப்பட முடியாத கணிப்பான்களின் பாவனை* ***மாத்திரம்*** *அனுமதிக்கப்படும்.*

(6) ***செயல் வினைச் சொற்களின் செவ்வை நிரல்*** *அவற்றின்* ***வரைவிலக்கணங்களுடன்*** *இணைக்கப் பட்டுள்ளது. ஒவ்வொரு வினாவும் ஒரு செயல் வினைச்சொல்லைக் கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் வினாக்களுக்கான விடைகளை* ***செயல் வினைச் சொற்களின் செவ்வை நிரலில்*** *தரப்பட்டுள்ள வரைவிலக்கணத்தின் அடிப்படையில் எழுதுதல் வேண்டும்.*

(7) ***கணித அட்டவணை*** *வழங்கப்படும்.*

(8) *100 புள்ளிகள்.*

---

## <u>பகுதி A</u>

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

கீழ்வரும் தகவல்கள் 2022 மார்ச் 31 மற்றும் 2021 மார்ச் 31 ஆகிய திகதிகளில் உள்ளவாறான **வரையறுக்கப்பட்ட கியூஸ்ட் (தனியார்) கம்பனியின்** நிதிக் கூற்றுக்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன:

| | **2022 மார்ச் 31 இல் (ரூபா)** | **2021 மார்ச் 31 இல் (ரூபா)** |
|---|---|---|
| தொக்கு | 2,525,000 | 2,175,000 |
| வியாபார வருமதிகள் | 4,525,000 | 2,850,000 |
| வியாபார சென்மதிகள் | 5,060,000 | 3,400,000 |

2022 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான மொத்த விற்பனைகள் ரூபா 29,500,000/- ஆகும். தொக்கு இருப்புக் காலம் 73 நாட்களாகக் கணிப்பிடப்பட்டுள்ளதுடன் 50% விற்பனைகளும் சகல கொள்வனவுகளும் கடனடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**நீங்கள் செய்யவேண்டியது :**

2022 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான தொழிற்படு மூலதனச் சுற்றுக் காலத்தைக் **கணிக்குக.**

(05 புள்ளிகள்)

## வினா 02

**வரையறுக்கப்பட்ட ரெடி கம்பனியானது** ரெடி பியர்ஸ் (Teddy bears) பொம்மைகளைத் தயாரித்து விற்பனை செய்கிறது. கீழ்வரும் தகவல்கள் 2022 யூலை மாதத்திற்கான **வரையறுக்கப்பட்ட ரெடி கம்பனியின்** ஏடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டிருந்தன :

| | அலகு ஒன்றிக்கு (ரூபா) |
|---|---|
| நேர் பொருள் | 550 |
| நேர் கூலி (0.5 மணித்தியாலங்கள் - மணித்தியாலமொன்றுக்கு ரூபா 400/- வீதம்) | 200 |
| மாறும் உற்பத்தி மேந்தலைகள் | 75 |

அலகொன்றின் உண்மையான / பாதிடப்பட்ட விற்பனை விலை ரூபா 1,400/- ஆகும். 2022 யூலை மாதத்திற்கான பாதிடப்பட்ட மற்றும் உண்மையான உற்பத்தி / விற்பனை அலகுகள் விபரம் கீழே தரப்பட்டுள்ளது :

| | பாதிடப்பட்ட (அலகுகள்) | உண்மையான (அலகுகள்) |
|---|---|---|
| உற்பத்தி | 2,000 | 1,870 |
| விற்பனைகள் | 1,900 | 1,915 |
| ஆரம்ப தொக்கு | 300 | 400 |
| இறுதித் தொக்கு | 400 | 355 |

யூலை மாதத்திற்கான பாதிடப்பட்ட மற்றும் உண்மையான நிலையான மேந்தலைகள் விபரம் கீழ்வருமாறு :

| நிலையான மேந்தலை | பாதிடப்பட்டது (ரூபா) | உண்மையானது (ரூபா) |
|---|---|---|
| உற்பத்தி | 215,000 | 265,000 |
| உற்பத்தியற்ற | 425,000 | 468,000 |
| | **640,000** | **733,000** |

**நீங்கள் செய்யவேண்டியது :**

எல்லைக் கிரயமிடல் முறையைப் பயன்படுத்தி, 2022 யூலை 31 இல் முடிவடைந்த மாதத்திற்கான வருமானக் கூற்றைத் **தயாரிக்குக.** (05 புள்ளிகள்)

## வினா 03

**வரையறுக்கப்பட்ட ரெக்ஸ் கம்பனி** பாடசாலைப் பைகளைத் தயாரித்து விற்பனை செய்கிறது. கம்பனியானது நாட்டின் பொருளாதார நிலைமைகள் காரணமாக, 2022 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டில் 3,500 பைகளை மாத்திரமே தயாரித்து விற்பனை செய்திருந்த அதே வேளை ஆண்டிற்கான பாதிடப்பட்ட உற்பத்தி / விற்பனை 5,500 பைகள் ஆக இருந்தது. கீழ்வரும் தகவல்கள் 2022 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கம்பனியின் ஏடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டன :

*(ரூபா '000)*

| | உண்மையானது (3,500 பைகள்) | பாதிடப்பட்டது (5,500 பைகள்) |
|---|---|---|
| விற்பனைகள் | 11,200 | 17,600 |
| நேர் பொருள் | (4,192) | (6,152) |
| நேர் கூலி | (3,223) | (4,823) |
| மாறும் உற்பத்தி மேந்தலைகள் | (649) | (1,120) |
| நிலையான உற்பத்தி மேந்தலைகள் | (448) | (525) |
| நிலையான நிருவாக மேந்தலைகள் | (648) | (648) |
| **இலாபம்** | **2,040** | **4,332** |

ஆண்டின் தொடக்கத்திலோ அல்லது முடிவிலோ எவ்வித தொக்குகளும் காணப்படவில்லை.

**நீங்கள் செய்யவேண்டியது :**

2022 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நெகிழ்வுப் பாதீட்டை (தொழிற்பாட்டுக் கூற்றினை) **தயாரிக்குக.** (05 புள்ளிகள்)

## வினா 04

**வரையறுக்கப்பட்ட ஒப்ரா கம்பனி** பல்வேறு பாகங்களையும் (components) பயன்படுத்தி **பொருள் Q** இனைத் தயாரித்து விற்பனை செய்வதில் ஈடுபட்டுள்ளது. இந்தப் பாகங்கள் அனைத்தும் தற்போது **வரையறுக்கப்பட்ட ஒப்ரா கம்பனி**யினாலேயே தயாரிக்கப்படுகின்றன. **வரையறுக்கப்பட்ட ஒப்ரா கம்பனி, பொருள் Q** இனைத் தயாரிக்கப் பயன்படுத்தும் **பாகம் X** இனை அலகொன்று ரூபா 1,350/- என்ற விலையில் வெளித் தரப்பு உற்பத்தியாளர் ஒருவரிடமிருந்து கொள்வனவு செய்வது பற்றிக் கவனம் செலுத்துகிறது.

**பாகம் X** தொடர்பில் கீழ்வரும் தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன :

(1) **பாகம் X** இன் நியமக் கிரய அட்டை கீழே தரப்பட்டுள்ளது :

| | **ஓர் அலகிற்கு (ரூபா)** |
|---|---|
| நேர் பொருள் | 650 |
| நேர் கூலி (அலகொன்றிற்கு 0.75 மணித்தியாலங்கள்) | 420 |
| மாறும் உற்பத்தி மேந்தலைகள் | 245 |
| நிலையான மேந்தலைகள் | 105 |

(2) நிலையான மேந்தலைகள், பாதிடப்பட்ட உற்பத்திக் கணியமான 6,600 அலகுகளின் அடிப்படையில் உறிஞ்சப்படுகின்றன.

(3) கம்பனியானது வெளித் தரப்பிடமிருந்து கொள்வனவு செய்ய முடிவெடுக்குமாயின், 30% நிலையான மேந்தலைகளைச் சேமிக்க முடியும் என்பதுடன், ரூபா 2,500,000/- இழப்பீடொன்றை வழங்கி 50% நேர் கூலியையும் நீக்க (laid off) முடியும். இதற்கு மேலதிகமாக, **பாகம் X** இனைத் தயாரிக்கப் பயன்படுத்தப்படுகின்ற இயந்திரத்தை ரூபா 2,300,000/- விலைக்கு விற்பனை செய்யவும் முடியும்.

**நீங்கள் செய்யவேண்டியது :**

கணிப்பீடுகளின் ஆதரவுடன், கம்பனியானது **பாகம் X** இனை வெளித் தரப்பிடமிருந்து கொள்வனவு செய்ய வேண்டுமா, இல்லையா என்பது பற்றி **மதிப்பீடு செய்க.** (05 புள்ளிகள்)

*பகுதி A யின் முடிவு*

# <u>பகுதி B</u>

(மொத்தம் 30 புள்ளிகள்)

## வினா 05

**வரையறுக்கப்பட்ட ரிக்ஸ் கம்பனி** 3 வெவ்வேறான அளவுகளில் (சிறிய, நடுத்தரமான, பெரிய) பொருள் களைத் தயாரித்து விற்பனை செய்வதில் ஈடுபட்டுள்ளது. கீழ்வரும் தகவல்கள் அடுத்த காலாண்டிற்காகத் தரப்பட்டுள்ளன :

| | **ரூபா (அலகொன்றிற்கு)** | | |
|---|---|---|---|
| | **சிறிய** | **நடுத்தரமான** | **பெரிய** |
| விற்பனை விலை | 800 | 1,100 | 1,500 |
| நேர் பொருள் | 300 | 450 | 650 |
| திறமையான கூலி (மணித்தியாலமொன்றுக்கு ரூபா 200/-) | 160 | 200 | 240 |
| திறமையற்ற கூலி (மணித்தியாலமொன்றுக்கு ரூபா 150/-) | 150 | 225 | 270 |
| காலாண்டு ஒன்றுக்கு பாதிடப்பட்ட விற்பனை (அலகுகளில்) | 500 | 300 | 160 |

அடுத்த காலாண்டிற்காகக் கிடைக்கப்பெறும் கூலி கீழ்வருமாறு மதிப்பிடப்பட்டுள்ளது :

| | |
|---|---|
| திறமையான கூலி | 860 மணித்தியாலங்கள் |
| திறமையற்ற கூலி | 1,300 மணித்தியாலங்கள் |

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) கணிப்பீடுகளின் ஆதரவுடன் வரையறைக் காரணி / காரணிகளை **இனங்காண்க.** (04 புள்ளிகள்)

(b) இனங்காணப்பட்ட வரையறைக் காரணி / காரணிகளின் அடிப்படையில் உத்தம உற்பத்திக் கலவையை **கணிப்பிடுக.** (06 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 06

**வரையறுக்கப்பட்ட நியூ கம்பனி, பொருள் X** இனை உற்பத்தி செய்து, நிகழ்நிலை (online) மற்றும் மொத்த விற்பனை ஊடாக விற்பனையில் ஈடுபடுகிறது. கீழ்வரும் தகவல்கள் **பொருள் X** இனது அலகொன்றின் நியம கிரய அட்டையிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

| | **அலகொன்றிற்கு (ரூபா)** |
|---|---|
| விற்பனை விலை | 1,350 |
| மூலப்பொருள் **A** (800 கிராம் - கிலோகிராமொன்று ரூபா 600/- வீதம்) | 480 |
| மூலப்பொருள் **B** (200 கிராம் - கிலோகிராமொன்று ரூபா 400/- வீதம்) | 80 |
| கூலிக் கிரயம் | 150 |

செயற்பாடுகளுடன் தொடர்புடைய கீழ்வரும் தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன :

(1) மொத்த விற்பனைகளில் 70% ஆனவை மொத்த விற்பனையாளர்களுக்கு மேற்கொள்ளப்படுகின்றன. மொத்த விற்பனையாளர்களுக்கான விற்பனையில் 65% ஆனவை 30 நாட்கள் காலப்பகுதி கொண்ட கடன் அடிப்படையிலும் எஞ்சியவை 60 நாட்கள் காலப்பகுதி கொண்ட கடன் அடிப்படையிலும் மேற்கொள்ளப்படுகின்றன. நிகழ்நிலை ஊடான விற்பனைகள் பொருளை விநியோகிப்பதற்கு முன்னரான வங்கி மாற்றல்கள் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் அதே வேளை வங்கி மாற்றல் இடம்பெற்று ஒரு நாளிற்குள் பொருளானது விநியோகம் செய்யப்படுகிறது.

(2) 2022 ஆகஸ்ட் மாதம் தொடக்கம் 2023 சனவரி மாதம் வரையிலான காலப்பகுதிக்குரிய உற்பத்தியும் விற்பனையும் கீழ்வருமாறு பாதிடப்பட்டுள்ளன :

| | **ஆகஸ்ட்-22** | **செப்ரெம்பர் -22** | **அக்டோபர்-22** | **நவெம்பர் -22** | **டிசெம்பர்-22** | **சனவரி -23** |
|---|---|---|---|---|---|---|
| **விற்பனை (அலகுகள்)** | 2,700 | 2,700 | 2,700 | 3,000 | 3,750 | 3,600 |
| **உற்பத்தி (அலகுகள்)** | 3,000 | 3,000 | 3,000 | 3,000 | 3,450 | 3,300 |

(3) மூலப்பொருள் **A** ஆனது 60 நாட்கள் கடன் தவணை மீது வழங்குநர் ஒருவரிடமிருந்து கொள்வனவு செய்யப்படுவதுடன் மூலப்பொருள் **B** ஆனது ஒவ்வொரு மாத ஆரம்பத்திலும் மாதாந்த அடிப்படையில் காசு மூலம் கொள்வனவு செய்யப்படுகிறது.

(4) கூலிக் கிரயம் ஒவ்வொரு மாத முடிவிலும் செலுத்தப்படுகிறது.

(5) மாதமொன்றுக்கான ஏனைய நிருவாகச் செலவினம் ரூபா 180,000/- ஆகும். இச்செலவினத்தில் 40% ஆனவை செலவு செய்யப்படும் மாதத்திற்கு அடுத்துவரும் மாதத்தில் செலுத்தப்படுவதுடன் மீதியானது செலவு செய்யப்படும் மாதத்திலேயே செலுத்தப்படுகிறது.

(6) 2022 அக்டோபர் 01 இல் ஆரம்ப காசு மீதி ரூபா 140,000/- ஆக இருக்கும்.

**நீங்கள் செய்யவேண்டியது :**

2022 அக்டோபர், நவெம்பர் மற்றும் டிசெம்பர் மாதங்களுக்கான காசுப் பாதீட்டைத் **தயாரிக்குக.**

(10 புள்ளிகள்)

## வினா 07

**XY PLC** என்பது கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்தில் பட்டியலிடப்பட்ட ஒரு கம்பனியாகும். கீழ்வரும் தகவல்கள் **XY PLC** இன் நிதிக் கூற்றுக்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

(1) **XY PLC** ஆனது பங்கொன்று ரூபா 25/- விலையில் விநியோகிக்கப்பட்ட 20 மில்லியன் சாதாரண வாக்குரிமைப் பங்குகளை விநியோகத்தில் கொண்டிருக்கிறது. இப்பங்குகள் தற்போது பங்கொன்று ரூபா 36/- விலையில் வர்த்தகம் செய்யப்படுவதுடன் கம்பனியானது கடந்த நிதியாண்டிற்கு பங்கொன்றுக்கு ரூபா 6/- என்ற அடிப்படையில் பங்கிலாபம் செலுத்தியிருந்தது. பங்கிலாபங்கள் ஆண்டிற்கு 5% இனால் வளர்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

(2) கம்பனியானது தனிச்சமொன்று ரூபா 100/- விலையில் ஆண்டொன்றிற்கு 10% கூப்பன் வீதமொன்றுடன் 7 மில்லியன் தனிச்சங்களை விநியோகித்திருந்தது. தனிச்சமொன்றின் தற்போதைய சந்தை விலை ரூபா 95/- ஆக இருப்பதுடன் 5 ஆண்டுகளில் அவை மீட்கப்படும்.

(3) கம்பனி 24% இல் வருமான வரி செலுத்துவதற்கான கடப்பாட்டைக் கொண்டுள்ளது.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) நீண்ட கால நிதியிடல் மூலமொன்றைத் தெரிவு செய்யும்போது **XY PLC** கருத்திற்கொள்ள வேண்டிய இரண்டு (02) விடயங்களை **நிரற்படுத்துக.**

(02 புள்ளிகள்)

(b) கீழ்வருவனவற்றைக் **கணிப்பிடுக** :

(i) சாதாரண வாக்குரிமைப் பங்குகளின் கிரயம் (02 புள்ளிகள்)

(ii) மீட்கத்தக்க தனிச்சங்களின் கிரயம் (03 புள்ளிகள்)

(iii) சந்தைப் பெறுமதிகளைப் பயன்படுத்தி, நிறையேற்றிய சராசரி மூலதனக் கிரயம் (WACC)

(03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B யின் முடிவு*

## பகுதி C

(மொத்தம் 50 புள்ளிகள்)

### வினா 08

**வரையறுக்கப்பட்ட கெப்றி கம்பனி பொருள் B** இனை உற்பத்தி செய்து விற்பனை செய்கிறது. கீழ்வரும் தகவல்கள் நியம கிரய அட்டையிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

| | **அலகொன்று (ரூபா)** |
|---|---|
| நேர் பொருள் | |
| **பொருள் T1** (0.25 லீற்றர் - லீற்றரொன்று ரூபா 800/- வீதம்) | 200 |
| **பொருள் T2** (4.75 லீற்றர் - லீற்றரொன்று ரூபா 160/- வீதம்) | 760 |
| நேர் கூலி (30 நிமிடங்கள் - மணித்தியாலமொன்றுக்கு ரூபா 600/- வீதம்) | 300 |
| மாறும் மேந்தலைகள் (மணித்தியாலமொன்றுக்கு ரூபா 200/-) | 100 |
| **மொத்த மாறும் கிரயம்** | **1,360** |
| விற்பனை விலை | 2,500 |
| **அலகொன்றுக்கான பங்களிப்பு** | **1,140** |

மாதமொன்றிற்குப் பாதிடப்பட்ட விற்பனைகள் / உற்பத்தி 4,500 அலகுகள் ஆகும். 2022 யூன் மாதத்திற்கான உண்மையான விற்பனைகள் / உற்பத்தி 4,220 அலகுகள் ஆகும். 2022 யூன் மாதத்திற்கான உண்மைத் தகவல்கள் கீழ்வருமாறு :

| | **(ரூபா)** |
|---|---|
| விற்பனை வருமானம் (4,220 அலகுகள்) | 10,866,500 |
| நேர் பொருள்: | |
| **பொருள் T1** (1,180 லீற்றர்) | 920,400 |
| **பொருள் T2** (24,200 லீற்றர்) | 5,324,000 |
| நேர் கூலிக் கிரயம் (மணித்தியாலமொன்றுக்கு ரூபா 630/-) | 1,297,800 |
| மாறும் மேந்தலைகள் | 504,700 |

2022 யூன் மாதத்திற்காக முகாமையால் கணிப்பிடப்பட்டுள்ள முரண்கள் கீழ்வருமாறு :

| | | |
|---|---|---|
| நேர் கூலி வினைத்திறன் முரண் | 30,000 | சாதகமானது |
| நேர் கூலி வீத முரண் | 61,800 | பாதகமானது |
| மாறும் மேந்தலை செலவின முரண் | 92,700 | பாதகமானது |
| மாறும் மேந்தலை வினைத்திறன் முரண் | 10,000 | சாதகமானது |
| விற்பனை எல்லை கனவளவு முரண் | 319,200 | பாதகமானது |
| விற்பனை விலை முரண் | 316,500 | சாதகமானது |

***நீங்கள் செய்யவேண்டியவை :***

(a) கீழ்வரும் முரண்களைக் **கணிக்குக** :

(i) நேர் பொருள் விலை முரண் (02 புள்ளிகள்)

(ii) நேர் பொருள் கலவை முரண் (04 புள்ளிகள்)

(iii) நேர் பொருள் விளைவு முரண் (04 புள்ளிகள்)

(b) பாதிடப்பட்ட பங்களிப்பை உண்மையான பங்களிப்புடன் இணக்கம் செய்வதற்கான தொழிற்பாட்டுக் கூற்றினைத் **தயாரிக்குக.** (05 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

## வினா 09

**வரையறுக்கப்பட்ட பிட்னெஸ் (Fitness) கம்பனி** உடற்பயிற்சிக் கூடங்களை இயக்குகிறது. இக்கம்பனி புறநகர் பகுதியொன்றில் இடமொன்றை வாடகைக்கு எடுத்து, அந்த இடத்தில் ஒரு புதிய உடற்பயிற்சிக் கூடத்தைத் திறப்பதற்கான சாத்தியத்தன்மை பற்றி தற்போது மதிப்பீடு செய்கிறது. அந்த இடம் 5 ஆண்டுகள் காலப்பகுதிக்கு வாடகைக்கு எடுக்கப்படும். முதலாம் ஆண்டு வாடகையாக ரூபா 240,000/- இருப்பதுடன் இந்த வாடகை 5% வருடாந்த அதிகரிப்பைக் கொண்டிருக்கிறது.

ஆரம்ப முதலீடாக இடப்படுகின்ற உபகரணத்தின் கிரயம் ரூபா 50 மில்லியனாக இருக்குமெனவும் அதன் ஆயுட்காலம் 3 ஆண்டுகளாக இருக்குமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. இந்த உபகரணத்தின் பயன்தரும் ஆயுட்கால முடிவில் அது புதிய உபகரணம் ஒன்றினால் உடனடியாகவே மாற்றீடு செய்யப்பட வேண்டும். இந்தப் புதிய உபகரணத்தின் கிரயம் ஆரம்பத்தில் இடப்பட்ட உபகரணத்தின் கிரயத்தை விட 20% உயர்வானதாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. புதிய உபகரணம் 2 ஆண்டுகள் ஆயுட்காலத்தைக் கொண்டிருக்குமென எதிர்பார்க்கப்படுவதுடன், செயற்றிட்டத் திட்டமிடல் கால எல்லையான 5 ஆவது ஆண்டின் இறுதியில் புதிய உபகரணத்தின் ஒடிவுப் பெறுமதி (scrap value) ரூபா 25 மில்லியனாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

அனைத்து உபகரணங்கள் மீதும் ஆண்டிற்கு 20% இல் மூலதனப் படி (விடுதொகை) கோர முடியும் என்பதுடன் சொத்துக்களின் ஆயுட்காலம் ஈறாக கிரயத்தில் நேர்கோட்டு அடிப்படையில் தேய்மானம் அறவிடப்படுகிறது.

தேய்மானம் தவிர்ந்த வருடாந்த நிருவாகச் செலவினங்கள் ரூபா 4,000,000/- ஆக இருக்குமென எதிர்பார்க்கப்படுவதுடன் வருடாந்த பணியாளர் கிரயமாக ரூபா 3,600,000/- இருக்குமெனவும் எதிர்பார்க்கப் படுகிறது. ஆரம்பத்தில் அமைக்கப்பட்ட கிரயம் ரூபா 2 மில்லியன் ஆனது செயற்றிட்டத்தின் ஆரம்பத்தில் செலுத்தப்பட வேண்டும்.

5 ஆண்டுகள் ஈறான வருமானம் கீழுள்ளவாறு அமையுமென எதிர்பார்க்கப்படுகிறது :

| | **ஆண்டு 1** | **ஆண்டு 2** | **ஆண்டு 3** | **ஆண்டு 4** | **ஆண்டு 5** |
|---|---|---|---|---|---|
| வருமானம் (ரூபா) | 30,000,000 | 40,000,000 | 45,000,000 | 46,000,000 | 37,000,000 |

கம்பனி, ஆண்டிற்கு 24% இல் வருமான வரி செலுத்துவதுடன், வரியானது அதே ஆண்டிலேயே செலுத்தப்பட வேண்டும். கம்பனியின் மூலதனக் கிரயம் ஆண்டிற்கு 15% ஆக உள்ளது.

***நீங்கள் செய்யவேண்டியவை :***

(a) புதிய செயற்றிட்டத்தின் நிகர இற்றைப் பெறுமதியைக் (NPV) **கணிக்குக.** (13 புள்ளிகள்)

(b) NPV இன் அடிப்படையில் மேற்படி செயற்றிட்டத்தின் சாத்தியத்தன்மையை **மதிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

## வினா 10

(A) **வரையறுக்கப்பட்ட Y கம்பனி பொருள் OP2** இனை பல்வேறு செயன்முறைகள் ஊடாகத் தயாரிக்கிறது. கீழ்வரும் தகவல்கள் 2022 ஏப்ரல் மாதத்திற்கான ஒரு செயன்முறையுடன் தொடர்புடையதாகும் :

| | |
|---|---|
| நேர் பொருள் (10,000 கிலோகிராம்) | ரூபா 3,600,000/- |
| நேர் கூலி | ரூபா 1,944,000/- |
| மாறும் மேந்தலை | ரூபா 648,000/- |
| வெளியீடு | 8,600 கிலோகிராம் |
| சாதாரண நட்டம் | நேர் பொருளில் 5%.<br>இதனை கிலோகிராமொன்று ரூபா 100/- விலையில் விற்பனை செய்ய முடியும். |

மாத ஆரம்பத்தில், கீழ்வரும் பூர்த்தி மட்டங்களில் 500 கிலோகிராம் ஆரம்ப புத்துருவாகும் வேலைகளின் இருப்பு காணப்பட்டதுடன், ஆரம்ப புத்துருவாகும் வேலையானது சராசரி கிரய அடிப்படை ஒன்றின் மீது கருத்திற் கொள்ளப்படுகிறது :

மூலப்பொருள் : 100% பூர்த்தி, பெறுமதி ரூபா 175,000/-

நேர் கூலி : 20% பூர்த்தி, பெறுமதி ரூபா 17,400/-

மாறும் மேந்தலைகள் : 15% பூர்த்தி, பெறுமதி ரூபா 7,330/-

மாத இறுதியில், மூலப்பொருள், கூலி மற்றும் மாறும் மேந்தலைகள் முறையே 100%, 40% மற்றும் 30% பூர்த்தி மட்டங்களில் 1,100 கிலோகிராம் இறுதிப் புத்துருவாகும் வேலைகள் இருப்பில் காணப்பட்டன.

**நீங்கள் செய்யவேண்டியது :**

சமான அலகுகள் மற்றும் கிரயக் கூற்றையும் செயன்முறைக் கணக்கையும் **தயாரிக்குக.** (14 புள்ளிகள்)

(B) **வரையறுக்கப்பட்ட சிக்ஸ் கம்பனி, பொருள்களான PQ** மற்றும் **QR** ஆகியவற்றை தயாரிக்கிறது. அது தொடர்பான கீழ்வரும் தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன :

| அலகொன்றிற்கு | PQ (ரூபா) | QR (ரூபா) |
|---|---:|---:|
| விற்பனை விலை | 1,400 | 600 |
| நேர் பொருள் | 530 | 320 |
| நேர் கூலி | 180 | 85 |
| மாறும் உற்பத்தி மேந்தலைகள் | 120 | 25 |

2022 செப்ரெம்பர் மாதத்திற்கு **பொருள் PQ** மற்றும் **QR** ஆகியவற்றுக்காக பாதிடப்பட்ட உற்பத்தி மற்றும் விற்பனை அலகுகள் முறையே 18,000 மற்றும் 36,000 அலகுகள் ஆகும். 2022 செப்ரெம்பர் மாதத்திற்காக பாதிடப்பட்ட நிலையான மேந்தலைத் தொகை ரூபா 8,610,000/- ஆகும்.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) ஒன்றித்த இலாபக் கனவளவு (PV) விகிதத்தைக் **கணிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(b) **வரையறுக்கப்பட்ட சிக்ஸ் கம்பனியின்** இலாப நட்டமற்ற (சமநிலை) விற்பனைப் பெறுமதியை **கணிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

பகுதி C யின் முடிவு

# செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வரைவிலக்கணம் (பொருள் வரையறை) |
|---|---|---|
| **மட்டம் 01**<br>**கிரகித்தல்**<br><br>முக்கிய தகவலை ஞாபகப்படுத்தி விபரித்தல் | **பொருள் வரைறை செய்க / வரைவிலக்கணம் செய்க (Define)** | தன்மை, வியாபகம் அல்லது பொருள் பற்றி விபரித்தல் |
| | **வரைக (Draw)** | வரிப்படம் அல்லது வரைபடம் வடிவில் வரைந்து காட்டுதல் |
| | **அடையாளங் காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் தெரிந்து கொள்ளல் அல்லது தெரிவு செய்தல் |
| | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதுதுல் |
| | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்க ரீதியாக அல்லது காரண ரீதியாக தொடர்புகளை நிலைநாட்டல் |
| | **கூறுக / குறிப்பிடுக (State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக தெரிவித்தல் |
| | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate / Compute)** | கணித ரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | **ஆராய்க (Discuss)** | முடிவொன்றினை அடையும் நோக்கில் வேறுபட்ட விடயங்களை விவாதத்தின் மூலம் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **விபரிக்குக (Explain)** | உரிய உண்மைகளை வெளிக்காட்டி, தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | **பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret)** | விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தெளிவுபடுத்தல் |
| | **ஏற்பிசைவு செய்தல் (Recognize)** | அறிவை அல்லது அவை சார்ந்த அனுபவத்தினைக் கொண்டு, செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இல்லாமையைக் காட்டுதல் |
| | **பதிவு செய்க (Record)** | உரிய பதிவுகளை விரிவாகப் பதிவு செய்தல் |
| | **தொகுக்குக / சுருக்கத்தைத் தருக (Summarize)** | பிரதான விடயங்களில் (உண்மைகள் அல்லது பெறுமதிகள்) சுருக்கமான கூற்றினைத் தருதல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 02**<br>**பியோகித்தல்**<br><br>கற்றதைக் கொண்டு வேறு ஒன்றினை அறிவதற்கு அறிவைப் பயன்படுத்துதல் / வினாக்களைத் தீர்த்தல் | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் |
| | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | **எடுத்துக் காட்டுடன் விபரிக்குக (Demonstrate)** | விசேடமாக உதாரணங்களுடன் நிறுவுதல் |
| | **வரைபடத் தாளில் வரைக (Graph)** | வரைபடம் ஒன்றின் மூலம் காட்டுதல் |
| | **தயாரிக்குக (Prepare)** | கேட்கப்பட்ட விடயத்தினை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | **முன்னுரிமைப்படுத்துக (Prioritize)** | முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்கு படுத்துதல் அல்லது வரிசைப்படுத்துதல் |
| | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile)** | வேறொன்னுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடு அல்லது விளக்கங்களின் மூலம் தீர்வு காணல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 03**<br>**பகுப்பாய்வு**<br><br>எண்ணங்களுக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி ஒப்பிடுதலும் வேறுபடுத்தலும் / திறந்த வினாக்களைத் தீர்த்தல் | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது வெளிப்பாட்டினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **வேறுபடுத்துக (Contrast)** | வேற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **பேதப்படுத்துக/வித்தியாசப்படுத்துக /வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்தும் வித்தியாசங்களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | **சுருக்கமாகக் காட்டுக / குறிப்பிடுக (Outline)** | முக்கிய குணாம்சங்களின்/சிறப்பியல்புகளின் தொகுப்பினைத் தருதல் |